ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2310/26 - 2022 දෙසැම්බර් මස 14 වැනි බදාදා - 2022.12.14

*2310/26 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரொஷான் ரணசிங்க** (பா. உ.),
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர்
விவகார அமைச்சர்.

கொழும்பு,
*2022, திசெம்பர் 14.*

**ஒழுங்குவிதிகள்**

அவ்வப்போது திருத்தஞ் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய மற்றும் 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகள், விளையாட்டின், விளையாட்டு வீர வீராங்கனைகளின் மற்றும் விளையாட்டில் ஈடுபடுவோரின் முன்னேற்றம், மேம்பாடு மற்றும் அபிவிருத்தி என்பனவற்றின் பொருட்டு கீழ்வருமாறு மேலும் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

(1) தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகளில் II ஆம் பகுதியின் 5(1) ஆம் ஒழுங்குவிதி, கூறப்பட்ட ஒழுங்குவிதியின் ;

"தமது அமைப்புவிதியில் காட்டப்பட்டுள்ள எண்ணிக்கையளவு பதவிதாங்குநர்கள் அடங்கிய குழு ஒன்றைத் தெரிவு செய்து நியமித்துக் கொள்ளுதல் வேண்டும்" எனும் வாக்கியத்திற்குப் பதிலாக "தமது அமைப்புவிதியில் காட்டப்பட்டுள்ள

1A - G 38347 — 08 (2022/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

எண்ணிக்கையளவு பதவிதாங்குநர்கள் அடங்கிய மற்றும் பதவிக்காலத்தின் உச்சளவானது இரண்டு (02) வருடங்களாக வேண்டிய நிறைவேற்றுக் குழு ஒன்றைத் தெரிவு செய்து நியமித்துக் கொள்ளுதல் வேண்டும்'' எனும் வாக்கியத்தைப் பிரதியிடுவதனால் இத்தால் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

*(2)* கூறப்பட்ட ஒழுங்குவிதிகளில் 5(2) ஆம் ஒழுங்குவிதியினை நீக்கி அதற்குப் பதிலாக கீழே தரப்பட்டுள்ள ஒழுங்குவிதியினைப் பிரதியிடுவதனால் கூறப்பட்ட ஒழுங்குவிதியானது மேலும் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

(i) குழுவின் ஒவ்வொரு பதவிதாங்குநரும் தேர்தல் நடாத்தப்படும் பொதுக் கூட்டத்தின் போது தெரிவுசெய்து நியமிக்கப்படுதல் வேண்டும் ;

(ii) யாதேனும் பதவிதாங்குநர் ஒருவர் ;

(அ) இரண்டு பதவிக் காலங்கள் (04 வருடங்கள்) தலைவர் பதவியினை வகித்திருந்தால், மீண்டும் தலைவர் பதவிக்கு தெரிவுசெய்யப்படுவதற்கு தகுதியுடையவராதலாகாது. எனினும், மேலும் நான்கு (04) வருட காலங்கள் குழு உறுப்புரிமையை வகிப்பதற்கு அது தடையாக இருத்தல் கூடாது.

(ஆ) நான்கு (04) பதவிக் காலங்கள் (எட்டு (08) வருட பதவிக் காலம்) பதவியினை வகித்திருந்தால் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராதலாகாது என்பதுடன் குழு உறுப்புரிமையை வகிப்பதற்கும் தகுதியுடையவராதலாகாது.

எனினும், இவ் ஒழுங்குவிதிகள் அமுலாக்கப்படும் திகதியாகும் போது தேர்தலின் வாயிலாக தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்பட்டுள்ள தலைவர் உள்ளடங்களான ஏனைய பதவிதாங்குநர்கள் தொடர்பாக அவர்கள் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டுள்ள பதவிக் காலங்கள் முடிவடையும் வரையில் கூறப்பட்ட பதவிகளை வகிப்பதற்கு இவ் ஒழுங்குவிதியானது இடையூறாக இருத்தல் கூடாது என்பதுடன், இவ் ஒழுங்குவிதிகளில் 7 (V) ஒழுங்கவிதியானது கூறப்பட்ட பதவிதாங்குநர்கள் தொடர்பாகவும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(iii) யாதேனும் குழு உறுப்பினர் ஒருவருக்கு குழு உறுப்புரிமையை வகிக்கக் கூடிய உச்சளவு கால எல்லை 4 பதவிக் காலங்கள் (08 வருடங்கள்) ஆதல் வேண்டும்.

எனினும், யாதேனும் பதவிதாங்குநர் ஒருவர் அல்லது குழு உறுப்பினர் ஒருவர் விளையாட்டுக்கள் சட்டம் அத்துடன் அதன் கீழ் நியமிக்கப்பட்ட யாதேனும் ஏற்றுக்கொள்ளப்பட்ட குழுவொன்றினால் நடாத்தப்பட்ட முறையான விசாரணையொன்றின் வாயிலாக அல்லது; ஏற்புடைய தேசிய சங்கத்தின் அல்லது அதனுடன் இணைந்த சர்வதேச சங்கமொன்றினால் அல்லது தேசிய விளையாட்டு சங்கத்தின் ஒழுக்காற்கு குழுவினால் ஒழுக்கக் காரணங்களின் அடிப்படையில் ;

நீக்கப்பட்டால் அல்லது தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டால் அல்லது தடைக்கு உள்ளாக்கப்பட்டால் கூறப்பட்ட நீக்கப்படல், தண்டனைக்கு உள்ளாக்கப்படல் அல்லது தடைக்கு உள்ளாக்கப்படல் மேற்கொள்ளப்பட்ட ஆளொருவருக்கு கூறப்பட்ட பதவிக்கு அல்லது குழு உறுப்புரிமைக்கு மீண்டும் தெரிவுசெய்து நியமித்துக்கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவராவார்.

(iv) தலைவர், செயலாளர், பொருளாளர் உள்ளடங்களான எந்தவொரு நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ஒருவர், விளையாட்டுக்கள் சட்டம், பிரமாணங்கள், கட்டளைகள் மற்றும் கூறப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கத்தின் /சம்மேளனத்தின் அமைப்புவிதிக்கு முறணாக நடவடிக்கைகளில் ஈடுபடும் சந்தர்ப்பமொன்றில் ஏற்புடைய சங்கத்தின் /சம்மேளனத்தின் வாக்குரிமையுள்ள உறுப்பினர் ஒருவரால், வாக்குரிமையுள்ள உறுப்பினர்களின் எளிய பெரும்பான்மையுடன் கொண்டுவரப்படும் பிரேரணையொன்று விசேட பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டுவதனால் அல்லது பொதுக் கூட்டமொன்றில், சங்கத்தின்/ சம்மேளனத்தின் வாக்குரிமையுள்ள உறுப்பினர்களின் 2/3 பெரும்பான்மையால் நிறைவேற்றிக்கொள்ளப்படுவதன் வாயிலாக, ஏற்புடைய பதவிக் காலம் பூர்த்தியாவதற்கு முன்னராயினும் பதவியிலிருந்து நீக்க முடியும்.

(v) எந்தவொரு பதவிதாங்குநரினது அல்லது குழு உறுப்பினர் ஒருவரினது கூறப்பட்ட பதவிக் காலத்தினை வகிக்கக் கூடிய உச்சளவு வயதெல்லை எழுபது (70) வருடங்களாக மட்டுப்படுத்தப்படும்.

*(3)* கூறப்பட்ட ஒழுங்குவிதிகளில் 5 (1) ஆம் ஒழுங்குவிதியின், (iii) (அ), (iii) (ஆ), (iii) (இ) மற்றும் (iv) ஆகிய பந்திகளை நீக்கி அதற்குப் பதிலாக கீழே தரப்பட்டுள்ள பந்திகளைப் பிரதியிடுவதனால் கூறப்பட்ட ஒழுங்குவிதியானது இத்தால் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

(iii) (அ) A மற்றும் B தரமுடைய தேசிய விளையாட்டுச் சங்கமொன்று தொடர்பாக இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் நிறுவகத்தின் ஓர் உறுப்பினராக அல்லது இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழைப் பெற்றுள்ள பட்டயக் கணக்காளர் அல்லது அதற்கு மேலான சான்றிதழ் ஒன்றைப் பெற்றுள்ள அல்லது இலங்கை வங்கியாளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட வங்கியியல் மற்றும் நிதி தொடர்பான சான்றிதழைப் பெற்றிருக்கும் பொருளாளர் ஒருவரும் நிதி முகாமைத்துவத்துறையில் ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவம் கொண்டு உப பொருளாளர் ஒருவரும்,

(ஆ) C தரமுடைய தேசிய விளையாட்டுச் சங்கமொன்று தொடர்பாக, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உரிமத்தினைப் பெற்றுள்ள, உரிமம் கொண்ட வணிக வங்கியொன்றில் அல்லது உரிமம் கொண்ட விசேட வங்கியொன்றில் அல்லது 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிமத்தினைப் பெற்றுள்ள நிதிக் கம்பனி ஒன்றில் அல்லது 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கிழ் பதிவு பெற்றுள்ள பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகை நிறுவனம் ஒன்றில் அல்லது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் எற்பாடுகளின் கீழ் ஒருங்கிணைந்த கம்பனி ஒன்றில் கணக்கியல் முகாமையாளராக அல்லது கணக்கியல் லிகிதராக ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் அனுபவமுடைய பொருளாளர் ஒருவரும் நிதி முகாமைத்துவ துறையில் ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் அனுபவமுடைய பொருளாளர் ஒருவரும் நிதி முகாமைத்துவ துறையில் ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் அனுபவமுடைய உதவிப் பொருளாளரும்,

(4) கூறப்பட்ட ஒழுங்குவிதிகளில் 5 (4) (ஔ) பந்தியினை நீக்கி கீழே தரப்பட்டுள்ள பந்தியினைப் பிரதியிடுவதனால் கூறப்பட்ட ஒழுங்குவிதியானது மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

5(4) (ஔ) "இலங்கையின் பிரசை ஒருவராக இல்லாதிருப்பின் அல்லது பிரசையாதல் இல்லாதொழியின் அத்துடன் இரட்டைப் பிரசையாயின்"

(5) கூறப்பட்ட ஒழுங்குவிதிகளில் 5 (4) (ங) பந்திக்கு மேலதிகமாக 5 (4) (ச) பந்தியினை உட்சேர்ப்பதனால் கூறப்பட்ட ஒழுங்குவிதியானது மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

5 (4) (ச) விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சில் சேவையாற்றும் அல்லது விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான கடமையொன்றில் பணியாற்றும் அரசாங்க ஊழியர் ஒருவராயின்,

(6) கூறப்பட்ட ஒழுங்குவிதிகளில் 5 (4) (ர) பந்திக்கு மேலதிகமாக கீழே தரப்பட்டுள்ள பந்திகளை உட்சேர்ப்பதனால் கூறப்பட்ட ஒழுங்குவிதியானது மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

5 (4) (ல) வேட்பு மனுக்களை சமர்ப்பிப்பதற்கு அண்மித்த மூன்று (03) வருடங்களுக்குள் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையினை தேர்தல் குழுவிடம் சமர்ப்பிப்பதற்குத் தவறினால்,

5 (4) (வ) நிதி அல்லது வேறு உதவிகளை முறைகேடாகப் பயன்படுத்தியமைக்கு அல்லது ஊழலிற்கு அல்லது ஒழுங்கீனத்திற்கு அல்லது விளையாட்டின் ஒழுங்கத்தை அல்லது சங்கத்தின் அமைப்பு விதியின் ஒழுக்கத்தை மீறியமை தொடர்பாக தடைக்கு உட்படுத்தப்படும் செயலொன்றிற்கு அல்லது வேறு சட்டத்திற்கு புறம்பான விடயமொன்று தொடர்பாக விளையாட்டு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் அவர்களால் முறையாக நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழுவொன்றினால், விசாரணைக் குழுவொன்றினால், மேன்முறையீட்டு ஆலோசனைச் சபையொன்றினால், விளையாட்டுக்கள் தொடர்பான குற்றங்களைத் தடுக்கும் பொலிஸ் விசேட விசாரணை அலகினால் அல்லது பாராளுமன்ற கோப் குழுவின் பரிந்துரையில் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக குற்றமிழைத்தவர் ஒருவராக அல்லது தேசிய விளையாட்டுச் சங்கமொன்றில்/சம்மேளனமொன்றில்/குழுவொன்றில் பதவிக் காலம் ஒன்றினை வகிப்பதற்கு தகுதியற்றவர் என பரிந்துரைக்கப்பட்டுள்ள ஆளொருவராயின்,

(7) கூறப்பட்ட ஒழுங்குவிதிகளில் 5 (5) ஒழுங்குவிதிக்கு மேலதிகமாக கிழே தரப்பட்டுள்ள பந்தியினை சேர்ப்பதனால் கூறப்பட்ட ஒழுங்குவிதியானது மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

5 (5) (i) அமைச்சர் அவர்களின் எழுத்துமூல அனுமதியின் கீழ், சமூகத்திற்கு விளையாட்டிற்கு விசேட சேவையொன்றினை ஆற்றிய மற்றும் அரசாங்கத்திற்கு விசேட வருமான வரியினைச் செலுத்தும் ஆளொருவர் தேசிய விளையாட்டுச் சங்கமொன்றில்/சம்மேளனமொன்றில் பதவியொன்றினை வகிப்பதற்கு தகுதியுடையவராவார்".

(8) கூறப்பட்ட ஒழுங்குவிதிகளில் 5 (6) ஒழுங்குவிதியினை நீக்கி, அதற்குப் பதிலாக கீழே தரப்பட்டுள்ள ஒழுங்குவிதியினை பிரதியிடுவதனால் கூறப்பட்ட ஒழுங்குவிதியானது மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

5 (6) தேசிய விளையாட்டுச் சங்கமொன்றில், மாகாண விளையாட்டுச் சங்கமொன்றில், மாவட்ட விளையாட்டுச் சங்கமொன்றில் அல்லது இணைந்த விளையாட்டுக் கழகமொன்றில் தலைவர், செயலாளர், பொருளாளர், உப/பிரதித் தலைவர், உப/பிரதிச் செயலாளர், உப/பிரதிப் பொருளாளர் எனும் பதவியொன்றினை வகிக்கும் ஆளொருவர் தனது தேசிய விளையாட்டுச் சங்கத்தில் அல்லது வேறு எந்தவொரு தேசிய விளையாட்டுச் சங்கமொன்றில், மாகாண விளையாட்டுச் சங்கமொன்றில், மாவட்ட விளையாட்டுச் சங்கமொன்றில், பிரதேச விளையாட்டுக் கழகமொன்றில் அல்லது இணைந்த விளையாட்டுக் கழகமொன்றில் எந்தவொரு பதவியினையும் வகிப்பதற்கு தகுதியற்றவராவார்.

(9) மேலும் தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகளின் III ஆம் பகுதியின் 7 ஆம் ஒழுங்குவிதியின் (xxvi) ஆம் பந்திக்கு மேலதிகமாக கீழே தரப்பட்டுள்ள பந்தியினைப் புதிதாக சேர்ப்பதனால் கூறப்பட்ட ஒழுங்கு விதியானது மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

7 (xxvii)

தேசிய விளையாட்டுச் சங்கமொன்றுடன்/சம்மேளனமொன்றுடன் இணைந்த விளையாட்டுக் கழகங்கள், நிறுவனங்கள், மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள், மாகாண விளையாட்டுச் சங்கங்கள் அல்லது மாவட்ட அல்லது மாகாண சங்கமொன்றுடன் இணைந்த விளையாட்டுக் கழகங்கள் மற்றும் இணைந்த உறுப்பினர் அமைப்புக்களின் தேர்தல்கள் உள்ளடங்களான அனைத்து செயற்பாடுகள் பற்றிய தகவல்களை ஏற்புடைய தேசிய விளையாட்டுச் சங்கத்தினால்/சம்மேளனத்தினால் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு வருடாந்தம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(10) தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகளின் III ஆம் பகுதிக்கு மேலதிகமாக

"III (அ) எனும் பகுதி" என புதிய பகுதியொன்றினை சேர்ப்பதன் வாயிலாகவும் அதனை 'விளையாட்டுச் சங்க மேற்பார்வை' எனப் பெயரிடுவதனாலும், தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகளின் III (அ) ஆம் பகுதியின் 7 (அ) ஆம் ஒழுங்குவிதியாக கீழ்வரும் ஒழுங்குவிதியினை புதிதாக சேர்ப்பதனாலும், கூறப்பட்ட ஒழுங்குவிதியானது மேலும் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

(7) (அ) விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம், மேலே குறிப்பிடப்பட்ட சகல விளையாட்டுச் சங்கங்கள், கழகங்கள் மற்றும் இணைந்த நிறுவனங்கள் தொடர்பாக முழுமையான மேற்பார்வையொன்றினை மேற்கொள்ளுவதன் பொருட்டு வேலையொழுங்கொன்றினை தயாரித்தல் வேண்டும்.

மேலும் ;

விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தினால் மாவட்ட விளையாட்டுச் சங்கங்களின் மேற்பார்வையானது அந்தந்த மாவட்டங்களின் விளையாட்டுப் பணிப்பாளரின் ஊடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தினால் மாகாண விளையாட்டுச் சங்கங்களின் மேற்பார்வையானது அந்தந்த மாகாணங்களின் விளையாட்டுப் பணிப்பாளரின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், கூறப்பட்ட மேற்பார்வை நடவடிக்கையானது தேசிய விளையாட்டுக் கொள்கைகளுக்கு இணங்குமாறு அந்தந்த மாகாண சபைகளினால் கட்டளைச் சட்டங்களின் வாயிலாக அறிமுகஞ் செயயப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

EOG 12-0204

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.